# செம்பதாகை

மலர்: 4
1982 சித்திரை
இதழ்: 4
விலை ரூபா: 1·00
புரட்சிகர வெகுஜன் ஏடு


## அரசு - கூட்டணி உறவால்

# ஐந்தாம் படை உருவாகிறது!

**யூ. என். பி.** அரசுக்கும் தமிழர் கூட்டணிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இறுக்கமான உறவால் ஊர்காவல் படை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. இப்படை ஊர்களையும், மக்களையும் பாதுகாக்கவா அன்றி அரசுக்கும் கூட்டணிக்கும் ஐந்தாம்படை வேலை செய்யவா? இதையிட்டு சகல மக்களும் தமது ஆழ்ந்த கவனத்தைச் செலுத்துதல்வேண்டும்.

இந்த நாட்டின் சொத்துடைய வர்க்கத்தின் பொருளாதார, அரசியல், கலாச்சார அமைப்புக்களைப் பாதுகாத்து ஆளும் வர்க்க சக்திகளை நிலைநிறுத்தி வைத்திருப்பதற்காக ஏற்கனவே பொலிஸ், இராணுவ, கடல் ஆகாயப்படைகள் என்ற நான்கு படை அமைப்புக்கள் இருக்கின்றன. இவற்றிடம் ஏராளம் ஆயுதங்களும் வாகனங்களும் உண்டு. மக்களின் வரிப்பணத்தில் இருந்து நாளாந்தம் லட்சக்கணக்கான ரூபாய்களை இப்படைகள் விழுங்கிவருகின்றன. சட்டத்தையும், ஒழுங்கையும் நாட்டையும் பாதுகாப்பதே இப்படைகளின் கடமை எனக் கூறப்படுகிறது.

அப்படியாயின் இந் நான்கு படைகளுக்கும் அப்பால் ஆயுதங்களோ, பயிற்சிகளோ, சட்ட அதிகாரங்களோ அற்ற நிலையில் ஐந்தாவது படையாக ஊர்காவல் படை உருவாக்கப்படுவதன் நோக்கம்தான் என்ன? ஆயுதங்களும் பயிற்சிகளும் மிகக்கூடிய சட்ட அதிகாரங்களும் கொண்ட நாற்படைகளால் ஊர்களைப் பாதுகாக்க முடியாவிட்டால் இந்த ஊர்காவல் படையால் எதைச் செய்ய முடியும். அதாவது அரசுக்கும் அதன் ஆதரவுச் சக்திகளுக்கும் குறிப்பாகத் தமிழர் கூட்டணிக்கும் உளவு பார்க்கும் ஐந்தாம்படையாக மட்டுமே இது இருக்கமுடியும். இதனால் யூ. என். பி கூட்டணி எதிர்ப்புச் சக்திகள் உளவறியப்படுவதற்கு ஊர் ஊராய் ஊர்காவல்படை சேவையில் ஈடுபடுத்தப்படும். இதுவும் '' ஜே. ஆர். – அமிர் ஜனநாயகம் '' தளைத்தோங்க வாய்ப்பை ஏற்படுத்தும் என்றே நம்பப்படுகிறது.

மண்ணைப் பாதுகாக்க தமிழ்ஈழம் கேட்ட தமிழர் கூட்டணித் தலைமை இன்று மாவட்டசபையும் - ஊர்காவல் படையும் கொண்டு மண்ணைப் பாதுகாத்துவிடலாம் என்று தமிழ்மக்களின் கண்களில் மண்ணைத் தூவுகிறது.

நாடு முழுவதிலும் ஊர்காவல்படை திரட்டும் இவ்வேளை யூ.என் பி.யும் —கூட்டணியும் அதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றன. இன்று யூ.என். பி.க்கு எதிரான மக்களின் வெறுப்பும் எதிர்ப்பும் உச்ச நிலைக்கு வந்துகொண்டிருக்கின்றது. அதேபோல் தமிழ் மக்கள் மத்தியில் தமிழர் கூட்டணி பெரும் சோதனைக் கட்டத்தை எதிர்நோக்கியுள்ளது. பழைய ஏமாற்று வித்தைகளைப் புதிய வழிகளில் முன்னெடுக்க முடியாது கூட்டணித் தலைமை விழி பிதுங்கி நிற்கின்றது. யூ.என்.பி.யுடனுன கூட்டணியின் வர்க்க ஐக்கியத்தைப்பற்றி தமிழ் மக்கள் கோபாவேசத்துடன் காணப்படுகின்றனர். மக்களின் கோபாவேசத்தில் இருந்து தங்களைப் பாதுகாக்க கூட்டணி அரசிடமே பாதுகாப்புக் கேட்க வேண்டிய நிலைக்கு வந்துளது.

இந்நிலையில் தமக்கு தலையாட்டும் பொம்மைகளையும் புதிய விசுவாசிகளையும் கூட்டணித் தலைமை தேடவேண்டிய அவசியத்திற்கு வந்துள்ளது. அதனாலேயே ஊர்காவல் படையை அரசின் தயவுடன் அமைத்தால் அதன் மூலம் தமது காரியங்களை ஆற்றி உரியவர்களை உரியபடி நடத்துவதற்கு ஏதுவாகவிருக்கும் என்று நம்புகின்றனர்.

சுருங்கக்கூறின் யூ. என். பி. யினதும், தமிழர் கூட்டணியினதும் மக்கள் விரோத —மக்கள் ஏமாற்று நடவடிக்கைகளின் காரணமாக அவர்களுக்கு உடனடியாகவே ஒரு ஐந்தாம் படை அவசியப்படுகிறது. அதையே ஊர்க்காவல் படை என்ற அமைப்பின் மூலம் நிறைவேற்ற முயலுகிறார்கள். ஆனால் மக்களைப் பொறுத்தவரை இவ் ஊர்காவல்படைபற்றி மிக விழிப்புடனும், ஜாக்கிரதையுடனும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

## மக்களே ஜாக்கிரதை!

# மேதின ஊர்வலங்களுக்குத் தடை!

உலகம் முழுவதிலும் வாழும் கோடிக்கணக்கான தொழிலாளர்களின் வர்க்க உணர்வையும், வர்க்க ஐக்கியத்தையும் ஒருமுகப்படுத்துவதற்காவே மேதினம் சர்வதேசத் தொழிலாளர்தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. 1886 இல் அமெரிக்காவில் எட்டு மணிநேர வேலை கோரிய தொழிலாளர்களை அமெரிக்க முதலாளிவர்க்கம் ரத்தவெள்ளத்தில் களப்பலி கொண்ட நாளை நினைவுகூரவே மேதினம் உலகில் தொழிலாளர் தினமாக எழுந்தது. இன்றும் இப்புரட்சிகர தினத்தில் உலகம் பூராவிலும் உள்ள தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளுக்கான போராட்டக் குரலை எழுப்பி முதலாளி வர்க்கத்திற்கு எதிரான தமது போராட்ட ஐக்கியத்தை வலுப்படுத்தி வருகின்றனர்.

இலங்கையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சேவகனுகச் செயல்படும். யூ.என். பி. அரசு மேதினத்தைக் கண்டு எப்பொழுதும் வேண்டாட வெறுப்புடனேயே நடந்துவந்துளது. 1956 இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டரநயக்கா ஆட்சிக்காலத்திலேயே தான் மேதினம் விடுமுறைத் தினமாக்கப்பட்டது. யூ.என்,பி. அரசு எக்காலத்திலும் மேதினத்தைத் தொழிலாளர் தினமாக அங்கீகரிக்கவில்லை. அவர்கள் மேதினத்தில் கேளிக்கைகளும் நடனங்களும் நடத்தி தொழிலாளர்களின் உணர்வுகளைத் திசைதிருப்பவே முயன்று வந்துள்ளனர்.

இன்று தலைநகர் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மேதின ஊர்வலங்களுக்கு தடைவிதிக்கப்பட்டுளது. ஒரே நேரத்தில் நாடுமுழுவதிலும் தமக்கெதிரான தொழிலாளி விவசாயிகளது எதிர்ப்புக் குரல் கேட்பதைச் சகிக்கமுடியாத நிலையிலேயே இத்தடை விதிக்கப்பட்டுளது.

### தமிழர் கூட்டணி மறைமுக ஆதரவு

இந்த ஊர்வலத் தடைக்கு தமிழர் கூட்டணி மறைமுக ஆதரவுகாட்டுகிறது. காரணம் தமிழ்மக்கள் மத்தியில் அவர்கள் அம்பலமாகியுள்ள இவ்வேளை சிறு ஊர்வலத்தைத்தானும் நடத்த முடியாத இக்கட்டான நிலையில் தடைவிதிப்புக்கு தமது ஆதரவை மௌன நிலையில் தெரிவித்துள்ளனர். ஆனால் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி(இடது) மேதின ஊர்வலத்திற்கான தடையை மிகவன்மையாகக் கண்டிக்கிறது. இக்கண்டனத்தை கட்சியின் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் ஜனாதிபதிக்கு ஏற்கனவே அறிவித்துள்ளார்.

## ஆளும் வர்க்கத் தலைவர்களின்

# புதிய மாளிகைப் பிரவேசம்

நமது நாட்டையும் மக்களையும் அடக்கி ஆண்டுவரும் சிங்கள-தமிழ்-மூஸ்லீம் ஆளும் வர்க்கத்தின் தலைவர்கள் புதிய மாளிகையான கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பாராளுமன்றத்திற்குள் பிரவேசம் செய்துள்ளனர். கடந்த 52 வருடங்களாக ஆட்சி செய்வதற்குப் பாவித்த பழைய கட்டிடத்தை விட்டு சொகுசு மாளிகைக்குள் சுகபோகம் அனுபவிக்கச் செல்வதில், எவ்வித இன, மத பேதத்தையும் ஆளும் வர்க்கத் தலைவர்கள் காட்டவில்லை. தமது இதயங்களுக்கு மிகமிக் நெருங்கிய யூ. என். பி. ஆட்சியாளர்கள் அல்லாமல், வேறு ஆட்சியாளர்களாக இருந்திருந்தால் தமிழர் கூட்டணித் தலைவர்கள், நிச்சயம் தமது பகிஷ்கரிப்பு நாடகத்தை நடத்தி ''உண்மையான தமிழ் வீரர்களாக'' காட்சி கொடுத்திருப்பார்கள். என்ன செய்வது! யூ. என். பி. எஜமானர்களுக்கு மறுப்போ அன்றி எதிர்ப்போ காட்டமுடியாது தானே. இது தற்செயலான நிகழ்ச்சி அல்ல. ஆளும் வர்க்கத் தலைவர்களின் ஆழமான வர்க்க ஐக்கியத்தையே காணமுடிகிறது.

ஆளும் வர்க்கத் தலைவர்களுக்கு காலத்திற்கேற்ப சொகுசு மாளிகை கிடைத்துள்ளது. உழைக்கும் மக்களைப் பொறுத்தவரை பொருளாதாரச் சுமைகளும் அரசியல் அடக்கு முறைகளுமே கிடைத்துள்ளன. அதனாலேயே புதிய பாராளுமன்றப் பிரவேசம் பற்றி நாட்டுமக்கள் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை.

---

## இடது கம்யூனிஸ்ட்கட்சியின்
# மாபெரும் மேதின கூட்டம்

**யாழ், றிம்மர் மண்டபம்**
**1-5-82 சனி பி.ப, 5 மணி**

தலைவர்:
**தோழர் கே. ஏ. சுப்பிரமணியம்**

பேச்சாளர்கள்;

தோழர்கள்

| | |
|---|---|
| கே. செந்திவேல் | ஏ. ஆர். எட்மன் |
| டி. என். நதுங்கே | இ. தம்பையா |
| எஸ். தேவராஜா | கா. பஞ்சலிங்கம் |

சி. இராஜேந்திரன் மற்றும் பலர்

அனைவரும் வருக.

## கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

# யூ. என். பி. யின் குடும்ப ஆதிக்கம்!

கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னதாக, இன்று பதவியிலிருக்கும் யூ.என்.பி. பிரசாரம் செய்தபோது, திருமதி பண்டாரநாயக்கா குடும்பத்தினர் பல்வேறு பதவிகளில் இருப்பதாக கூறிவந்தனர். இன்று திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக இருக்கும் விக்கிரமவீரசூரியா என்பவர் 'குடும்ப மரம்' என்னெரு சித்திரம் வரைந்து தாய்மரத்திலிருந்து கிளைகளும் வேருமாகப் பலர் பதவிகளில் அமர்ந்திருப்பதைக் காட்டியிருந்தார். சர்வதேச அமெரிக்க சஞ்சிகைகள் அந்தக் கேலிச் சித்திரத்துக்கு நிரம்பிய முக்கியத்துவம் அளித்துப் பிரசுரஞ்செய்தன. அந்தப் பிரசாரத்துக்கு உபகாரம் செய்யுமுகமாகவே அவருக்கு உயர்ந்த பதவி வழங்கப்பட்டது. குடும்ப மரத்தைக் கீறிய அவருக்கு அமைச்சு ஒன்றை நிருவகிக்கும் ஆற்றல் இருக்கவில்லை என்பதைக் காலம் நிரூபித்து விட்டது.

இப்பொழுது ஜெயவர்த்தன வரவிருக்கும் தேர்தலுக்கு ஆயத்தம் செய்யத் துவங்கியிருக்கிருராம். பிரசார வல்லுநர்களாக அவர் கருதும் ஐவர் கொண்ட குழு ஒன்றை நியமித்திருக்கின்ருராம். தனது காரியதரிசி மனிக்டிவெல உட்பட ஐவர் அடங்கிய அக்குழுவில் விக்கிரமவீரசூரிய மீண்டும் இடம் பெற்றிருக்கின்ருர் எனத் தெரிகிறது. திருமதி பண்டாரநாயக்கா குடும்பம் மீண்டும் தலைதூக்கப் பார்க்கிறது என்பதே இவர்களின் பிரதான பிரசார சுலோகங்களில் ஒன்று. அதில் உண்மை இல்லாமலில்லை. ஆனல் கூறுபவர்கள் பெரிய ஜனநாயகவாதிகள் அல்லவே. இருசாராரும் முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல்வாதிகள்தானே. இதைப்பற்றி அண்மையில் இங்கு கொழும்பில் விஷயமறிந்த ஒருவருடன் பேசிக்கொண்டிருந்த பொழுது சொன்னர்: "ஜெயவர்த்தன கும்பல் ஒன்றும் தெரியாத சுத்தவாளிகள் போல பேசமுடியாது. இன்று அவர் குடும்பத்தினரின் ஆதிக்கத்திலும் உடமையிலும் மாத்திரம் நாற்பத்தேழு வர்த்தக நிறுவனங்கள் இருக்கின்றன; எல்லாம் பெரிய பெரிய கம்பனிகள்". வர்த்தக சுதந்திரம் என்ற பெயரில் தலைவரின் உறவினர்கள் நிதிசேர்த்து கம்பனி டைரக்டர்களாகி விட்டனர். ஏற்கனவே பணக்காரராய் இருந்தவர்கள் இப்பொழுது மேலும் பலமடங்கு பணக்காரராய் ஆகி வருகின்றனர். பதவியிலும் குடும்ப வளர்ச்சி உண்டு; பணம் சேர்ப்பதற்கும் குடும்பமரம் உண்டு. எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.

இந்த விடயம் தொற்று வியாதியைப்போல தமிழர் வியாபாரக் கூட்டணிப் பிரமுகர்களையும் பற்றிக்கொண்டிருப்பதாக செய்திகள் காதோடுகாதாய் அடிபடுகின்றன. தலைக்கட்டாய்கள் வர்த்தக முயற்சிகளிலும் கம்பனிகளிலும் பங்குகள் வாங்கிக் குவிப்பதாக பலரும் பேசிக்கொள்கின்றனர். ஊர் வாய்க்கு மூடிபோட முடியுமா? உண்மைகள் எப்படியோ வெளிவந்துதானே தீரும்! பிரபல யூ. என். பி. புள்ளி ஒருவரின் மருமகன் தலைமைவகித்து நடாத்தும் யப்பானிய இறக்குமதி ஏஜன்சியொன்றில் தமிழ்ப் பெருந்தலைவருக்கும் கணிசமான பங்குகள் இருப்பதாக கூறப்படுகிறது; வெளிநாட்டுத்தொடர்புகள் இருப்பதாகவும் தெரிகின்றது. பணம் பாதாளம் வரைக்கும் பாயும் என்று கூறுவார்கள்! குடும்பமரம் எம்மிடம் உண்டு என்று பெருமையுடன் கூறிக்கொள்வதுபோல தன்னிகரில்லாத் தமிழ்த் தலைவர் செயற்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்று புனிதமாக மேடைகளில் பேசிக்கொண்டு "மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்" என்று கவிதை பாடிக்கொண்டு, அண்ணாத்துரையின் அரசியல் வாரிசுகள் தமிழ் நாட்டில், தமிழ்மக்களைச் சுரண்டி கோடிக் கணக்கான ரூபாய்களைக் கொந்திராத்துக்களிலும், கொமிசன்களிலும், லஞ்சங்களிலும் பெற்றுக்கொள்வதைப்போல, அபிவிருத்திச் சபைகளினூடாக வியாபாரக்கூட்டணியினரும் மெல்லமெல்ல சம்பாதிக்க தொடங்கியிருப்பதாக கிசுகிசுக்கள் கிளம்புகின்றன. மாவட்ட சபைப் பிரமுகர்கள் வணிகப் புள்ளிகளுடன் றெஸ்ற்ஹவுஸ் ஹோட்டல்களில் பொழுதை போக்குவதாக பொதுசனம் பேசிக்கொள்வதைக் கேட்கக் கூடியதாய் இருக்கிறது. மக்களின் கண்ணுக்கு எதுவும் தப்புவதில்லையே.

★

## கூட்டணித் தலைவர்களின் சொத்துச் சேகரிப்பு

தளர்பதி அமிர்தலிங்கத்தார் வருடம் நான்கு முறை வெளிநாடுகளுக்கு உலக யாத்திரை போய்விட்டுத் திரும்பியபின் பத்திரிகைகட்கு அளிக்கும் பேட்டிகளில் தனது வீரப்பிரதாபங்களையும் வெட்டி விழுத்திய காரியங்களையும் விளாசுவது வழக்கம். ஒன்றில் அரசாங்கச் செலவில் அல்லது அப்பாவித் தமிழர் பலரின் செலவில் அல்லது பிறநாடுகள் சிலவற்றின் செலவில் உலகவலம் செய்துவிட்டுத் திரும்பும் அவரது வண்டவாளங்கள் இப்பொழுது உடனுக்குடன் இவ்வூர் மக்களுக்கும் எட்டிவிடுகின்றன. தமிழர் பிரச்சினைகளை உலகறியச் செய்வதற்காகவே தாங்கள் கஷ்டப்பட்டு உலகின் பல பாகங்களுக்கும் சென்று வருவதாக பம்மாத்துப்பண்ணும் இவர்கள் போகும் இடங்களில் என்னவெல்லாம்செய்து தங்கள் வசதிகளையும் பிரயாணங்களையும் பெருக்கிக் கொள்கின்ருர்கள் என்பதை அங்குள்ள தமிழ் இளைஞர்கள் பலர் அண்மைக்காலத்தில் அவதானித்து தமது நண்பர்கட்கும் உறவினர்கட்கும் எழுதுகின்றனர். இவற்றில் சில பத்திரிகைகளுக்கும் கிடைக்கின்றன. பாராளுமன்ற வாதத்தின் அலங்கோலம் அத்தனையும் புலப்படும்வண்ணம் வெட்கம், ரோஷம் இன்றி அழைப்புகளைப் பெற முயல்வதும், தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளையும் விருந்தோம்பலையும் துஷ்பிரயோகம் செய்வதும் நடிப்பதும் சர்வ சாதாரணமாகி விட்டன. தலைவர்கள் என்னும் பெயருக்கே எள்ளளவும் தகுதியற்றவாறு இவர்கள் நடந்துகொள்வது வெளிநாடுகளில் வாழும் தமிழருக்கு இப்பொழுது அருவருப்பையே ஏற்படுத்துகிறதாம். விசேடமாக போகும் இடங்களில் அன்பளிப்புகள் பெற்றுக்கொள்வது அண்மையில் ஒரு வியாதியாகத் தமிழ் அரசியல் தலைவர்களிடம் காணப்படுகிறதாம். ஒவ்வொரு பிரயாணத்தின் பின்பும் இத்தனை ஜீப் நிரம்ப சாமான்கள் கொண்டு வருவதே ஒவ்வொருவரினதும் தகுதிக்கும் பெருமைக்கும் பெறுமதிக்கும் அளவுகோலாயிருக்கிறதாம். டில்லிக்குப் போய் வந்தவர் மூன்று ஜீப் சாமான்கள் கொண்டுவந்ததால் தமிழ் நாடு போய்வந்தவர் ஐந்து ஜீப் சாமான்கள் கொண்டு வந்தாராம். தாயகத்திற்குப் போராடப் புறப்பட்டவர்கள் தங்குமடங்களை நிரப்புவதற்காக தமது ஜீப்களைப் பயன்படுத்தி வாழ்வது பாராட்ட வேண்டியதுதானே. வாழத்தெரிந்தவர்கள்.

★

## சற்றடே றீவியூவும் அமிர்தலிங்கமும்

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த சில மாதமாக வெளிவரும் 'சற்றர்டேரிவியூ' என்ற ஆங்கில வாரபத்திரிகை குறித்து இங்கு கொழும்பில் தமிழ் மத்தியதர வர்க்கத்தினரிடையே ஆர்வம் தோன்றியுள்ளது. கடல் கடந்த தமிழர்கள் சிலரின் பண உதவியுடனும், தமிழர் வியாபாரக் கூட்டணித் தலைவர்களின் போலித்தனத்தையும் இரட்டை வேடமனோபாவத்தையும் இனங்கண்டுகொண்ட சில தமிழ் அபிமானிகளின் உற்சாக ஆதரவுடனும் ஆங்கிலத்தில் வெளியிடப்படும் இப்பத்திரிகை சலசலப்பை ஏற்படுத்தி வருகிறது. 'சுதந்திரமான' போக்கு என்று விளம்பரப் படுத்தப்படும் இப்பத்திரிகை பலரிடையே ஆதரவுபெற்று வருவதற்குக் காரணம் அமிர் கும்பலை அது ஓரளவு விமர்சித்து வருவதாகும். வர்க்க அடிப்படையில் இப்பத்திரிகை முதலாளி வர்க்க சார்புடையதே. தமிழ் 'வணிகர்' பலர் இதில் விளம்பரம் செய்ய விரும்புகின்றனர். கூட்டணி யூ.என்.பியுடன் சல்லாபம் செய்வதை பத்திரிகை விமர்சித்துவந்துள்ளது. ஒருவிதத்தில் குடும்பச்சண்டை என்றும் குறிப்பிடலாம்.

ஆயினும் அதிகாரவெறி கொண்ட அமிருக்கு இத்தகைய விமர்சனங்களையும் இப்பொழுது ஏற்கமுடிவது இல்லையாம். அண்மையில் அமிர் இப்பத்திரிகை நடத்துபவர்களை சந்தித்தபொழுது தாறுமாருக ஏசினராம். சுதந்திரன் பத்திரிகையும் சில கம்யூனிஸ்ட் பிரசுரங்களும் எழுதுவதுபோல நீங்களும் எங்களைத் தாக்கி எழுதுகிறீர்கள். நாம் இதைத் தொடர்ந்தும் அனுமதிக்க இயலாது என்னும் தோரணையில் பேசித் தீர்த்தாராம்.

இது போதாது என்று இரண்டொரு தினங்களில் அரசின் பாதுகாப்புப் படையினரும் பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று சோதனைபோட்டு கேள்விகள் கேட்டு அட்டகாசம் புரிந்தனராம். தினசரிப் பத்திரிகைகள் இதனைச் செய்தியாகவும் பிரசுரித்தன. எதிர்க்கட்சி நிலையில் இருக்கும்போதே மாற்று அபிப்பிராயம் கொண்ட தமிழர்களை அதுவும் சம அரசியல் தத்துவார்த்தம் கொண்டவர்களை வெருட்டி ஆட்டிப்படைக்க முயலும் அமிர்தலிங்கத்தார் அதிகாரத்திலிருந்தால் என்ன செய்வார் என்று விஷயத்தைக் கேள்விப்பட்டவர்கள் பேசிக்கொண்டனர். இனஒற்றுமை பற்றி புத்தாண்டுச் செய்தி விடுக்கும் தலைவரே இனத்தவரை அடக்கி ஆளமுற்படுவது பலருக்கு விசித்திரமாக தோன்றியது. ஊர்காவல் படை இவர்களின் கைக்குக் கிடைத்தால், தமிழ் நாட்டில் தி.மு.க. ஆட்சியில் கலைஞர் கருணாநிதி அடக்குமுறையைக் கையாண்டது போலவே இவர்களும் தமிழ்ப்பாட்டாளிகளையும், விவசாயிகளையும், புத்திஜீவிகளையும், முற்போக்காளர்களையும் நசுக்குவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை என்று ஆத்திரத்துடன் கூறினர் ஒரு தமிழ் ஆசிரியர்.

தமிழ்மொழி, இனம் பற்றி கோஷம் எழுப்பி, அரசியல் வியாபாரம் நடத்திவந்துள்ள சகலவிதமான கூட்டணிகளும், பேரணிகளும் பாராளுமன்ற ஆசனங்களைக் கருத்திற் கொண்டனவே அன்றி மக்கள் நலனை அல்ல. பொதுஜனங்களின், உழைக்கும் மக்களின் நல்வாழ்விற்காகப் போராடும் முற்போக்கு, தேசபக்த இயக்கங்களை எதிர்ப்பதே இக்கட்சிகளின் அடிப்படை இயக்க முறை. யூ. என். பி. யுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தமிழ்த் தலைவர்கள், அரசுயந்திரத்தையும் பயன்படுத்தித் தமது எதிரிகளை நசுக்கத் தயங்கமாட்டார்கள் என்பதைக் கண்கூடாகக் காணக்கூடியதாய் உளது. வர்க்கப் போராட்டம் கூர்மையடைந்து வருகிறது. ★

## நீலனும் - வில்சனும்

சில நாட்களுக்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த இளைஞர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு கொழும்பிற்கு வந்திருந்தார். பலதையும் பேசிக்கொண்டிருக்கையில் வியாபாரக் கூட்டணியின் இன்றைய தூண்களாகளான நீலன் திருச்செல்வம் ஜெயரத்தினம் வில்சன் இருவரைப் பற்றிய பிரஸ்தாபம் வந்தது. திடீரென அந்த இளைஞரின் குரலில் ஆத்திரமும் ஆவேசமும் தொனித்தன. தமிழே எழுத வாசிக்கத் தெரியாத இரண்டு பிரகிருதிகள் - அந்நிய மோகத்தில் ஊறித் திளைத்திருப்பவர்கள் - நமது எதிர்காலத்தை நிர்ணயிக்க முனைந்திருப்பது எவ்வளவு பாதகமான செயல். அமெரிக்க தாசர்களாகிய அந்த இரு நபர்களும் அமிர் கும்பலைப் பந்தாடுகிருர்கள், படைக்காய்களாக உருட்டக்கூடியவர்களாக இருக்கிருர்கள். கொழும்புத் தமிழரின் பேராதிக்கத்தை அவர்களின் அபரிமிதமான செல்வாக்கு எடுத்துக் காட்டுகிறது என்று அந்த வாலிபர் உணர்ச்சிவசப்பட்டு பேசினுர்.

நீலன் இன்று பெரும்பாலான தமிழர்களால் அதிகம் வெறுக்கப் டும் நபர் என்பதில் ஐயமில்லை. ஆனல் கூட்டணியினர் யூ. என். பி. யுடன் கூடக்கூடச் சேர்ந்து நிற்பது நீலன்-வில்சன் இருவரின் செல்வாக்கினுல் மாத்திரமல்ல, கட்சியின் வர்க்க சார்பு அப்படி இருக்கிறது. தமிழ் முதலாளிகளும், வர்த்தகர்களும், தமது துரித வளர்ச்சிக்கு முதலாளித்துவ அமைப்பையும் கட்சியையும் நாடுகின்றனர். இளைஞர்கள் வெஞ்சிறையில் வாடினுல் என்ன? தாழ்த்தப்பட்டோர் கஷ்டப்பட்டால் என்ன? வறுமை மிஞ்சினுல் என்ன? தாயகம் அழிந்தால் என்ன? நாடு நலிவுற்றால் என்ன? இலாபமே பிரதானம். வர்க்க சமரசம் அமிரையும் ஜே. ஆரையும் இணைக்கிறது. அமெரிக்கரும், நீலன் போன்ருேரும் துணைக்காரணிகள். அமிரிடம் ஆழப்பதிந்துள்ள மார்க்சிய வெறுப்பு யூ. என். பி. தாசனுக அவரை ஆக்கி வருகிறது. இதுதான் உண்மை.

★

## பயப்பீதியின் வெளிப்பாடு!

கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுராவில் அமைக்கப்படவுள்ள புதிய பாராளுமன்றத்தைப் பாதுகாக்க நவீன ஆயுதங்களைக்கொண்ட பலம்மிக்க பொலிஸ்படை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. எத்தகைய நிலைமைகளையும் சமாளிக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள இப்பொலிஸ்படைக்கு நவீன றைபிள்கள், போதியளவு வெடிமருந்துகள், ஸ்டேர்லிங் சப்மெஷின் துப்பாக்கிகள், கண்ணீர்ப்புகைக் குண்டுகள் ஆகியன வழங்கப்பட்டுள்ளன. இப்பலமிக்க படையும் நவீன ஆயுதங்களும் யாரைப் பாதுகாத்து, யாரை எதிர்ப்பதற்காக யாருடைய பணத்தில் உருவாக்கப்பட்டுளது என்பதை பொதுமக்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

# தோட்டத் தொழிலாளர்கள் பெறும் ஊதியம் அவர்களின் சீவியத்திற்குப் போதுமானதல்ல!

எச். எல். கே. கரவிட்ட
பொதுச்செயலாளர், உழைக்கும் மக்கள் கட்சி,
தலைவர், செங்கொடிச் சங்கம்,

ஐந்து வருடங்களுக்கு முன் 1977 இல் வாக்குரிமை பெற்றிருந்த மிகப் பெரும் பான்மையினரான தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கை, யூ.என்.பி., இ.தொ.கா. கட்சிகளின் கீழ் சிறப்படையும் என்ற நம்பிக்கையில் அக்கட்சிகளை ஆதரித்தனர். இன்று அமைச்சர்களாக உள்ள எஸ்.தொண்டமான், காமினி திஸ்நாயகா ஆகியோர் தலைமைதாங்கும் தொழிற்சங்கங்களிலேயே பெரும்பான்மையான தோட்டத் தொழிலாளர்கள் அங்கம் வகிக்கின்றார்கள்.

இந்த இரண்டு பிரமுகர்களும் அல்லது இவர்களில் ஒருவராவது தோட்டத் தொழிலாளர்களின் தரத்தை உயர்த்துவதற்கு ஏதாவது முறையான நடவடிக்கை எடுத்துள்ளார்களா? திட்டவட்டமான பதில் இல்லை என்பதேயாகும். தோட்டத் தொழிலாளர்களின் இன்றைய அவலநிலை முன்னைய அரசாங்கத்தின்கீழ் இருந்ததிலும் பார்க்க எவ்வகையிலும் சிறப்பானதல்ல. சிங்களத் தோட்டத் தொழிலாளர்கள் அனுபவிக்கும் இன்னல்களையே தமிழ்த்தோட்டத் தொழிலாளர்களும் அனுபவிக்கின்றனர். அதேவேளை 1977க்கு முன்னர் இருந்த நிலையிலும் பார்க்க பாதுகாப்பின்மை என்ற உணர்வையும் மேலதிகமாக கொண்டிருக்கிறார்கள்.

தோட்டத் தொழிலாளர்கள் இன்று எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையானது அவர்களால் ஒரு ஜீவன ஊதியத்தைப் பெற முடியாதிருப்பதேயாகும். வரட்சிக்காலங்களில் இந்த நிலை மோசமடையும்போது வேலை கொள்வோர் வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் வேலையையே தோட்டத் தொழிலாளருக்கு வழங்குகின்றார்கள்.

வரண்ட மாதங்களில் தோட்டத் தொழிலாளி ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய சராசரி வருவாய் ஒரு அற்பத் தொகையான ரூ. 150 மட்டுமே. ஒரு குடும்பத்தில் சராசரி மூன்றுபேர் வேலை செய்வதாகக் கருதினால் அதற்குக் கிடைக்கக்கூடிய வருமானம் 450 மட்டுமே. இந்தத் தொகை இன்றைய தரத்தில் வறுமை மட்டத்திற்கு மேல் வைத்திருக்க ஒரு குடும்பத்திற்குப் போதாது. தோட்டத் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் உழைக்கிறார்கள் என்றும் ஏனையோரிலும் பார்க்க நல்ல நிலையிலிருக்கிறார்கள் என்றும் கூறப்படுவதை அம்பலப்படுத்தல் வேண்டும். வேலை கொள்வோரால் வழங்கப்பட்ட லயக்காம்பராக்களில் வதியும் தோட்டத் தொழிலாளர்களே இந்த நாட்டில் மிகவும் மோசமாகச் சுரண்டப்படுகிறார்கள்.

தோட்டங்களில் களவேலைகளே பத்தில் ஒன்பது பகுதி வேலையாய் அமைவதுடன், கடின உடலுழைப்பாகவும் உள்ளது. பெருந்தோட்ட அமைப்பில் வதிவிட உழைப்பாளர்களை தனித்துவமான முறையாகவும் ஆகக்குறைந்த கூலியையும் இணைந்ததாகவும் உளது. நகரத்திலோ அல்லது கிராமத்திலோ ஒரு பயிற்றப்படாத தொழிலாளி பெறும் கூலியையும் தோட்டத்தில் ஒரு பயிற்றப்பட்ட தொழிலாளி பெறும் கூலியுடன் ஒப்பிட்டால் இது தெளிவாகும்.

நகரத்தில் அல்லது கிராமத்திலுள்ள ஒரு பயிற்றப்படாத தொழிலாளி தனது உழைப்பை விற்பதன்மூலம், பயிற்றப்பட்ட தோட்டத் தொழிலாளி ஒரு நாளைக்குப் பெறும் கூலியின் கிட்டத்தட்ட இருமடங்கைப்பெற முடியும். ஆனால் தோட்டத் தொழிலாளி ஒருவாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாளைக்கு மட்டுமே வேலை பெற்றுக்கொள்ள முடியும்.

மாத சம்பளத்திற்கான கிளர்ச்சி சுமார் பத்துவருடங்களாக இடம்பெற்று வருகின்றபோதும் 1970 — 77 பகுதியில் சுதந்திர கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி கூட்டரசாங்கமோ இன்றைய யூ. என். பி. இ. தொ. கா. அரசாங்கமோ இந்தக் கிளர்ச்சி தொடர்பாக எந்தவித பாரதூரமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

யூ. என். - பி. இ.தொ. கா. அரசாங்கம் மாதச்சம்பளக் கோரிக்கையை உதாசீனம் செய்தது மட்டுமல்லாமல் 1980 இல் நாட்டின் ஏனைய தொழிலாளருக்கு வழங்கப்பட்ட 70 ரூபாவையோ, 1981 இல் அதேதொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட அதிகரிப்பையோ தோட்டத் தொழிலாளருக்கு வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கைக்கு செவிமடுக்கவில்லை.

தோட்டத் தொழிலாளருக்கு ஒரு ஜீவன சம்பளத்தை எவ்வாறு வழங்கலாம்? அவர்களுக்கு மாதத்திற்கு 26 நாள் வேலைவழங்கி ஏனைய தொழிலாளருக்கு வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பை வழங்குவதன்மூலம் இதைச் செய்யலாம். தேயிலைத்தோட்டங்களில் 26 நாளுக்கு கொழுந்து கொய்பவர்களுக்கும் வெட்டுபவர்களுக்கும் வேலை கிடைக்குமா என நிர்வாகம் திருப்பிக்கேட்கக்கூடும்.

தினமும் தேயிலை தோட்டத்தில் கொழுந்து பறிக்கவும், வெட்டவும் முடியாது தான். தொழிலாளர்களுக்கு கிரமமாக தொழில் வழங்கும் பிரச்சினைக்கான தீர்வு வேறு இடத்தில் இருக்கின்றது. இந்த இலக்கை அடைவதற்காக தோட்டங்களை ஓரளவுக்கு பன்முகப்படுத்தல் வேண்டும்.

இதனை வேலைகொள்வோர் எதிர்ப்பார்கள். ஆனால் நாட்டின் நலனுக்காகவும் தொழிலாளியின் நலனுக்காகவும் இது அவசியமானது. தோட்டங்களின் உழைப்பு, உணவுற்பத்தி, பண்ணை உற்பத்தி, பழச்செய்கை, கோழி, தேனீ வளர்ப்பு, நன்னீர் மீன் வளர்ப்பு அதனோடு ஒத்த தொழில்கள் என்பனவற்றிற்கு கொழுந்துபறித்தல், வெட்டுதல் இல்லாத காலங்களில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

உயர்ந்தமட்ட இயந்திரமயமாக்கல் தேவைப்படாத கைப்பணி — கிராமியத் தொழில்களில், தோட்டங்களில் உள்ள பெரும் எண்ணிக்கையான வேலைப்படையினரைப் பயிற்றுவிக்கலாம். இதன் மூலம் தோட்டங்களின்வேலைபடை பல வகுக்கப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்வதன்மூலம் இறக்குமதி செய்வதன்மூலம் செலவாகும் அன்னியச் செலாவணியை மீதப்படுத்தலாம்.

சீனவிடமிருந்து நாம் பாடத்தைப் படிக்கலாம். அங்குள்ள தோட்டத் தொழிலாளருக்கு மாதசம்பளம் கொடுக்கப்படுகிறது. சிலசமயங்களில் அவர்களின் சம்பளம் இலங்கை நாணயப்படி கிட்டத்தட்ட ரூபா 900ஆகும். சீனாவில் இவர்களுக்கு இளைப்பாற்று ஊதியமும் உண்டு. அது மாதத்திற்கு ரூபா 600 வரையிலிருக்கும்.

ஆனால் மேற்கூறப்பட்ட திட்டங்கள் முதலாளித்துவ தலைமையில் வெற்றிபெறும் சாத்தியம் சொற்பமே. தற்போதைய சுரண்டும் அமைப்புக்கள் இருக்கும்வரை தோட்டத்தொழிலாளர்களின் குரல் —குறிப்பாக இந்திய வம்சாவழித்தோட்டத் தொழிலாளர்களின் குரல் கவனமான கரிசனைக்குட்படாது.

சிங்கள முதலாளித்துவ அரசியற் தலைவர்களும் தொண்டமான்போன்ற மலையகத் தமிழ் அரசியல்வாதிகளும் தோட்டத் தொழிலாளர்களைத் தற்போதைய கேவல நிலையிலேயே வைத்திருக்க உள்ளூர விரும்புகின்றனர். தோட்டத் தொழிலாளர்களை அவர்களைச் சுற்றியுள்ள கிராமப்புறத்திலிருந்து பொருளாதார ரீதியாக சமூக ரீதியாக பிரித்து வைப்பதும் இலங்கையின் பிரதான அரசியல் பொருளாதார சமூக வாழ்க்கை ஓட்டத்துடன் இணையாமல் தடுத்துவைப்பதும் முதலாளித்துவ தலைவர்களின் நலன்களுக்கு இசைந்ததாகும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களுக்கும், சிங்கள மக்களின் நலன்களுக்குமிடையே ஒரு போலியான முரண்பாட்டை ஏற்படுத்தி இந்தக் கைங்கரியத்தைச் செய்வதில் வெற்றி கண்டுள்ளதுடன், முதலாளித்துவ நலன்களுக்கு சேவை செய்வதற்காக, அதிகாரபீடமேற இதனை ஏணியாகவும் உபயோகிக்கின்றனர். ★

# அமைச்சரின் ஆலோசனை யாருக்கு?

‘தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவழி மக்கள் ஒதுங்கி வாழக்கூடாது; மீண்டும் மீண்டும் தோட்டத் தொழில்களைச் செய்துகொண்டு இருக்கக்கூடாது. கங்காணி மேற்பார்வையாளர்கள் போன்ற உத்தியோகங்களுக்கு மட்டும் போகக்கூடாது; இராணுவத்திலும், பொலிசிலும் சேர வேண்டும்; கிராம சேவையாளர்களாக, எழுதுவினைஞர்களாக வர முயலவேண்டும்’’ இவ்வாறு அமைச்சர் தொண்டமான் அண்மையில் பேசிய கூட்டம் ஒன்றில் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதி உன்னதமான ஆலோசனையை வழங்கி உள்ளார்.

இது எப்படி இருக்கிறது என்றால் பாணவேண்டிக் காத்துக்கிடப்போரிடம் சென்று ஏன் மீண்டும் மீண்டும் பாணைக் கேட்கின்றீர்கள், கேக்கும் சாப்பிடவேண்டும். அதற்கான முயற்சிகளைச் செய்யுங்கள் என்று உபதேசிப்பதுபோலவே இருக்கிறது.

தோட்டத் தொழிலாளர்கள் அடிப்படையான ஜீவாதாரப் பிரச்சினைகளில் அதாவது உணவு, உடை, இருப்பிடம், கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்றவற்றில் இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தப்படுகின்றனர். இன்றைய ஆட்சியினரும் அல்லது அதற்கு முந்திய ஆட்சியினர்களும்சரி தோட்டத் தொழிலாளர்களை மனிதர்களாக மதித்து நடத்தினார்களா என்பது மிக முக்கிய கேள்வியாகும். அவர்களது முக்கிய கோரிக்கைகளான மாதசம்பளம், ஆண், பெண் சமசம்பளம் பிரசாவுரிமை போன்றனவற்றில் புறக்கணிப்புகளும் பாகுபாடுகளுமே நடத்தப்பட்டு வந்துள்ளன. அமைச்சர் தொண்டமான் பதவியும் பட்டமும் பெற்றுக்கூட இன்றும்தோட்டத் தொழிலாளர்களின் ஜீவாதாரநிலை மாறவே இல்லை.

இப்படி இருக்க அமைச்சர் பிரதான பிரச்சினைகளிலிருந்து மக்களைத்திசைதிருப்பும் நோக்குடன் இராணுவத்திலும் பொலிசிலும் சேர்ந்துகொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறுகின்றார். சாதாரண சிறுதொழில்களைப் பெறவே எத்தனை பாரபட்சமும் இனக்குரோத பார்வைகளும் செலுத்தப்படும் இவ்வேளை ஆயுதப் படைகளில் சேரும்படி தொண்டமான் ஆலோசனை கூறுவது உண்மையான நிலைமைகளை விளங்கிக் கொண்டு கூறுகிறாரா? அல்லது கவனத்தை திசைதிருப்ப சில உபாயங்கள் என்ற அடிப்படையில் கூறுகிறாரா? இதவும் ஒருவகையான தேர்தல்கால ஏமாற்றுப் பேச்சு என்றே கொள்ளல் வேண்டும்.

## சீனாவில் இப்படிச் செய்கிறார்கள்!

சீனாவில் உள்ள 55 தேசிய சிறுபான்மை இனங்களில் யீ தேசிய இனமும் ஒன்றாகும். இதன் சனத்தொகை நாற்பது லட்சத்து எண்பதினாயிரமாகும். (4·8 மில்லியன்). இச்சிறுபான்மை தேசிய இனத்தின் சரித்திர வரலாற்றை ஒழுங்குபடுத்திக் காட்டும் வகையிலான ஒரு சரித்திரதொல்பொருள் காட்சிச்சாலையை செச்சுவான் மாகாணத்தில் சீன அரசு கட்டி வருகிறது. எதிர்வரும் அக்டோபர் 1ம் திகதி திறந்து வைக்கப்படும். இரண்டாயிரம் ஆண்டுகளாக அடிமைச் சமுதாயத்திலிருந்து இன்றைய சோஷலிசம்வரையிலான வரலாற்றுக் காலகட்டத்தில் யீ இன மக்களின் வாழ்க்கை வளர்ச்சி, வழக்கங்கள் என்பனவற்றை மேற்படி சரித்திர தொல்பொருள் காட்சிச்சாலை மக்களுக்கு எடுத்துக் காட்டும். ஒரு தேசிய சிறுபான்மை இனத்தின் நீண்ட வரலாற்றுக்கு சோஷலிசத்தின்கீழ் கொடுக்கப்படும்முக்கியத்துவத்தை இதிலிருந்து அறியலாம்.

# ஜே. ஆரும் - யூ. என். பி. யும் அடுத்த ஆறு வருடங்களைக் கேட்பது ஏன்?

அடுத்த பாராளுமன்றப் பொதுத் தேர்தல் விரைவில் நடைபெறப்போகின்றது. ஜே.ஆர்.ரும் யூ. என். பி.யும் தங்களை மீண்டும் பதவியில் அமர்த்துமாறு மக்களைக் கேட்கின்றனர். விசேடமாக ஜே. ஆர். அடுத்த ஆறுவருடங்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தைத் தனக்கு வழங்கும்படி மக்களைக் கேட்டு வருகின்றார்.

இவர்கள் மீண்டும் அதிகாரத்திற்கு வர ஏன் விரும்புகின்றனர் என்பது மக்கள் மத்தியில் கேள்வியாக நிற்கிறது. தாங்கள் தொடங்கி உள்ள அபிவிருத்தித் திட்டங்களைப்பூர்த்தியாக்கி நாட்டை நாற்புறத்திலிருந்தும் சுபீட்சமடையச் செய்யவே தமக்கு அடுத்த அதிகார சந்தர்ப்பத்தைக் கேட்பதாக அவர்கள் கூறி வருகின்றனர். ஆனால் உண்மை அவ்வாறு இல்லை என்பதை மக்கள் புரிந்து கொள்ளாமலும் இல்லை.

கடந்த ஐந்துவருட கால ஆட்சியில் ஜே. ஆர்.ரும்—யூ. என் பி.யும் திட்டமிட்ட வகையில் தனது அமெரிக்க ஏகாதிபத்திய எஜமானர்களின் வழிகாட்டலின் கீழ் செயல்பட்டு வந்துள்ளனர். இது சாதாரண ஒரு செயல்பாடல்ல. மிகத்தூர நோக்குடன் நமது நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு நவகாலனித்துவ அமைப்புடன் இறுக்குவதென்றும், அதைப் பாதுகாக்க அரசியல் ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும் முடிவுசெய்து அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றி வந்திருக்கின்றனர்.

கடந்த ஐந்துவருட காலத்தில் நிறைவேற்றி வைக்கப்பட்ட நிகழ்ச்சிகளை ஒருவர் ஒழுங்குபடுத்திப் பார்ப்பாரேயானால் இந்த உண்மைகள் நன்றாகவிளங்கும். சுதந்திர வர்த்தக வலயத்தை ஆரம்பித்ததுமுதல் கட்டுப்பாடற்ற தாராள இறக்குமதி பொருளாதார கொள்கையை அமுல்படுத்தியது வரையிலான பொருளாதாரக்கொள்கையிலும் அரசியல் சாசனத்தைத் திருத்தித் தன்னைத் தானே ஜனாதிபதியாக்கிக் கொண்டதுமுதல் தொழிலாளர் விரோத, சனநாயக விரோத சட்டங்களை அமுலாக்கியதுவரையிலான அரசியல் நடவடிக்கைகளிலும், ஜே. ஆரும் — யூ.என்.பி.யும் திட்டமிட்டே செயல்பட்டு வந்திருக்கின்றனர்.

தனக்கு முன்னால் பலம் மிக்க பாராளுமன்ற கட்சியாக இருந்த சிறிலங்கா சுதந்திரககட்சியை சின்னாபின்னப்படுத்தும் திட்டத்தில் அதன் தலைவியான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் குடியியல் உரிமைகளைப் பறித்து, இலங்கையில் யூ. என் பி. தனிக்கட்சி சர்வாதிகாரத்திற்கான நடவடிக்கைகளைச் செய்து வந்துள்ளனர்.

இன்று நாடு பொருளாதாரரீதியில் என்றுமில்லாதவாறு நலிவடைந்து அரசியல்ரீதியில் பாசிச அடக்குமுறைகளின்கீழ் அல்லல்படும் ஒரு நிலைக்கு வந்தளது.

இந்நிலையிலேயே அடுத்த ஆறுவருடங்களுக்கான ஆட்சிப் பொறுப்பையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு மக்களைப் பார்த்துக் கேட்கின்றனர் இவ்வாறு அடுத்த பதவிக்காலத்தை இவர்கள் கேட்பதற்குக் காரணம் நாட்டையும் மக்களையும் ஒருவகையான சொர்க்கத்திற்கு இட்டுச்செல்வதற்கு அல்ல. மாறாகத் தமது தனிக்கட்சிப் பாசிச சர்வாதிகாரத்தின்கீழ் முழுநாட்டையும் மக்களையும் முழுமையாகக்கொண்டு வருவதற்கு சிறிது அவகாசம் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் நாடு முற்று முழுதான ஒரு பாசிச தனிக்கட்சி - தனிநபர் சர்வாதிகாரத்தின் கீழ் மூழ்கிவிடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. இன்றைய தென்கொரியா நாளைய இலங்கையாகத் திகழும் என்பது மறுக்க முடியாத உண்மையாகிவிடும். சனநாயகமும், தேர்தலும் மனித உரிமைகளும் இன்று நமது நாட்டில் கேள்விக் குறிகளாகிவிட்ட இந்நிலையில் ஜே. ஆர். ரின் கைகளுக்கு மீண்டும் அதிகாரம் செல்லுமாக இருந்தால் மிக இலேசாக மீட்டுக் கொள்ள முடியாத பயங்கர பாசிசத்தில்கீழ் நாடு சென்றடைய வேண்டிய தீர்ப்பாகிய நிலையே உருவாகும்.

ஆதலால் தான் அடுத்த பதவிக்காலத்தை ஜே. ஆர். ரும் யூ.என்.பி.யும் தமக்குத் தரும்படி கேட்பதையிட்டு நாட்டின் சகல மக்களும் மிக ஜாக்கிரதையுடனும் முன்னெச்சரிக்கையுடனும் இருந்து செயல்பட வேண்டியது மிக அவசியமாகும். ★

## எங்கள் குருஷேத்திரம்

நாட்டிலொரு பாதிதர மாட்டோ மென்றார்
நாமாள ஊரைந்தும் இல்லை என்றார்
கேட்டசில குடிசைகளும் இல்லை என்றார்
கூறுகிற சாமமொடு பேத தானம்
நாட்டாத நீதிதனைத் தண்டம் நாட்டும்
நல்லோர்கள் நம் சார்பாய்க் களத்தே வந்தார்
காட்டுகிறேன் கைவண்ணம் அங்கே; இங்கே
காணுகிறீர் காண்டீபம் கையில் என்றான்.

சம்பளத்தின் மேலாக மன்றம் செல்லும்
நாட்படிக்குச் சரியாக அலவன்ஸ் காசு,
காரியங்கள் செய்துதர வேறுங்காசு,
பதவியொழிந் தொருகாலம் பென்ஷன் காசு,
பெற்றோலும் வாகனமும் ரயிலில் போகப்
படுக்கையுடன் முதல்வகுப்பு பாஸ்சன்ரெண்டு
தந்திதபால் தொலைபேசி எல்லாம் ஓசி
பட்டணத்தில் தங்குயறை மலிவு, ஏ.ஸி,
போகவரக் கதவடியில் காவல் நின்று
கண்டவுடன் கும்பிடவும் கூட்டம் வேறு,
பாராளுமன்றத்துப் பதவிப் பேற்றை
நான்விடினும் மனைவிவிடாள், மக்கள் கேளார்.

விடுதலைக்கு விடுதலைக்கு என்றுபேசி
வருடங்கள் ஐந்தோடிப் போயிற் றின்னும்
ஓராண்டின் முடிவிற்குள் ஆக வேண்டி
அலறுகின்ற காரியங்கள் ஒன்று ரெண்டா?
மனைவியுடன் பிறந்தவரின் இம்போட் லைசன்ஸ்
அண்ணருக்கு மறுபடியும் பதவியேற்றம்
பணவுதவி செய்கின்ற பிஸினஸ் நண்பர்
பலதடவை கேட்டமுத கோட்டா, இன்னும்
பஸ்தரிப்பு நூல்நிலையம் பாட சாலை,
கக்கூசு கடைக ளெல்லாம் அத்திவாரம்,
கண்துடைப்பாய் நாலைந்து வேலைவாய்ப்பு,
வெல்ல முதல் வாக்களித்த வேலைமாற்றம்..

பார்த்தன் கைக் காண்டீபம் நழுவும், நண்பன்
பரந்தாமன் வாய் திறந்தால் வேலை போகும்.

—சேகர்

# இந்து மத மாநாடு வியாபாரமா? அரசியலா?

கடவுள் என்ன ஜாதி என்ற பிரச்சனை எல்லாம் முன்பு ஒரு காலத்தில் இருந்திருக்கலாம்; இப்போது நிச்சயமாக அது தீர்ந்துவிட்டது. கடவுள் வைசியர் என்பதுபற்றி இனிமேல் ஐயமே இல்லை. திருப்பதி தொடக்கம் சகல புண்ணிய ஸ்தலங்களும் வியாபார ஸ்தலங்களாக மாற்றப்பட்டுவிட்டன. இது ஒன்றும் இந்து மதத்துக்குரிய விசேடமல்ல. இனமத சார்பற்று கடவுள் விடயம் எப்போதோ ஒரு வியாபார விடயமாக மாறிவிட்டது. மதத்தின் பெயரால் நடந்து வந்த வியாபாரம் இன்று மற்ற வியாபாரங்களைப்போல் சர்வதேச வியாபாரமாகி விட்டதால் சர்வதேச மாநாடுகள் போன்ற போர்வைகளில் சர்வதேச மத வியாபாரம் பெருகி வருகிறது. இலங்கையின் சுதந்திர வியாபார வலயம் சர்வதேச மூலதனத்தை கவரத்தவறினாலும் யூ. என், பி. அரசு சர்வதேச மத மாநாடுகளைக் கவரத் தவறவில்லை.

தமிழ்த்தாயை (அவள் கூட ஒரு வைசிய மாதுதானோ தெரியாது) வைத்து முன்னொரு நாள் சென்னையில் தெருக்கூத்து நடந்து முடிந்தது. பின்பு யாழ்ப்பாணத்தில் அரசியல் வியாபாரமும் சின்னமேளம் சகிதம் திருவிழாவும் நடந்து நரபலியுடன் இனிதே நிறைவேறியது. பிறகு தமிழ் வளர்த்த மதுரையில் தமிழின் பெயரால் கோமாளிக் கூத்து ஒன்று போன வருடம் நடந்து முடிந்தது. அங்கே சுடக் கட்சி அரசியலும் சுருட்டலும் தங்குதடையின்றி நடந்ததோடு சினிமாக்காரர்களால் தமிழ்மாதா மறுபடியும் மானபங்கப்படுத்தப் பட்டாள். இப்போது கொழும்பில் இந்துமாநாடு எனச் சொல்லி சங்கீதம், நடனம் மற்றும் கேளிக்கைகள்காட்டி ஜனங்களைத்திரட்டி மாநாடு நடக்கிறது. த.வி.கூ. பகிஸ்கரித்தாலும்கூட இலவசமாக இனிய கலை நிகழ்ச்சிகளைக் காண யாரும் தயங்குவார்களா? பாவம் குமாரசூரியர்! இராஜதுரைக்குக் கொழும்பில் மாநாடு நடத்தும் அளவுக்கு இருந்த சாமர்த்தியம் முன்னவருக்கு இல்லாமல் போய்விட்டது. குமாரசூரியர் கொழும்பில் தமிழ் மாநாட்டை வைக்க முனைந்தபோது கூப்பாடு போட்டு அதை மறிக்க முடிந்த கூட்டணி வீரர்கள் இப்போது வெறும் பகிஸ்கரிப்புடன் ஒதுங்கிவிட்டார்கள். இது கையாலாகாதனமா அல்லது இராஜதந்திமா என்று தெரியவில்லை.

மாநாட்டைச் சாட்டியும் கலை நிகழ்ச்சிக்கு அனுமதிச் சீட்டுகளைக் காட்டியும் இன்னும் தெரிந்த தெரியாத பல்வேறு முறைகளிலும் யார் யாரோ எல்லாம் கைநிறையச் சம்பாதித்துத் தள்ளுகிறார்களாம் — ''கடவுளுக்குத் தான் தெரியும்!''

போஸ்டர்களிலும் அழைப்பிதழ்களிலும் மாநாட்டுச் சின்னம் போடப்பட்டு இருக்கிறது. மற்றப்படி எந்த மூர்த்தியின் படத்தை போடலாம் என்று முடிவுபண்ணச் சிரமமாயிருந்ததால்தானோ என்னவோ (அல்லது சாணி அபிஷேகத்தை நினைத்தோ) எல்லாருக்கும் பொதுவாக அமைச்சரின் படத்தைப் போட்டு விட்டார்கள். அமைச்சர்கூட அண்ணாதுரை, கருணாநிதி, எம். ஜி. ஆர். பாரம்பரியத்தில் அரசியலை ஆரம்பித்தவர் அல்லவா. சும்மா விடுவாரா? அமைச்சரை பகவான் சாயிபாபா இரட்சிக்க வேண்டும்.

இந்துமதத்தை ஒழிப்பதென்று கங்கணங்கட்டிக் கொண்டிருக்கும் திராவிடக் கழகக்காரர்களும் பகுத்தறிவு இயக்கவாதிகளும் இனிமேல் கொஞ்சம் ஓய்வு எடுக்கலாம், அந்தப்பொறுப்பை மாநாட்டுக்காரர்களே ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். ★

## வாளும் வன்முறையும் அமிர்!

கடந்த தேர்தலுக்கு முன் அமிர்தலிங்கத்திடம் பதவிகளோ, பட்டங்களோ, சுகபோகத்திற்கான வாய்ப்புக்களோ இருக்கவில்லை; அந்நிலையில் சத்தியாக்கிரகம் செய்த இளைஞர் முன்னிலையில் (நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில்) '' சங்கிலிய மன்னனின் வீரவாளை '' கையில் ஏந்தி தமிழீழத்திற்கு வீரசபதம் செய்து இளைஞர்களை வன்முறைப்பாதைக்கு உசிப்பிவிட்டவர் இத் தளபதியார். அதே மனிதர் பட்டம், பதவி, அதிகாரம், சுகபோகம் என்பனவற்றில் இன்று ஊறித்திளைத்திருக்கும்போது இளைஞர்களின் முன்னிலையில் வன்முறையால் விடுதலையோ அன்றி விமோசனமோ கிடைத்துவிடாது என்று இடத்துக்கிடம் அடித்துக் கூறி வருகின்றார். அமிரின் கொள்கைகளும் குத்துக்கரணங்களும் வர்க்க சுயநலமே அன்றி இனப் பொதுநலமல்ல என்பதை மக்கள் உணர்கிறார்கள்.

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம் 407 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் வெளியீடு: சி. நவரத்தினம் 15/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.